ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2188/32 - 2020 අගෝස්තු මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.08.13
*2188/32 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/1/81/2014.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/2/2014/A/194.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவில், இஹல விசிதெகே கிழக்கு கோறளே, இல. 553, லிஹிணிவெஹெர கிராம அலுவலர் பிரிவில், லிஹிணி வெஹெர கிராமத்தில் அமைந்துள்ள, குருநாகல் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடற் திரள் இல. 420151, வலயம் இல. 03, தாள் இல. 03 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 514 மற்றும் 515 இன் காணிக்கான விபரங்கள் மற்றும் எல்லைகள் :

01. **துண்டு இல. 514 - காணியின் பெயர் : ஹொலொன் ஹொல்ல வத்தை; உரிமை கோருவோர் : குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி; விஸ்தீரணம் : 1.5046 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 515, 82 மற்றும் 83; கிழக்கு : துண்டு இல. 83; தெற்கு : துண்டு இல. 94, 92 மற்றும் 88; மேற்கு : துண்டு இல. 88, 86 மற்றும் 515.

02. **துண்டு இல. 515 - காணியின் பெயர் : ஹொலொன் ஹொல்ல வத்தை; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.1192 ஹெக்டயார்**

வடக்கு : குடா ஓயா; கிழக்கு : துண்டு இல. 82, 83 மற்றும் 514; தெற்கு : துண்டு இல. 514 மற்றும் 88; மேற்கு : துண்டு இல. 86 மற்றும் குடா ஓயா.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு ரிதீகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்/காணி எடுத்தல் அலுவலர்,
ரிதீகம.

பிரதேச செயலகம்,
ரிதீகம,
2020, யூலை 30.

8 - 595